**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
*கோயம்புத்தூர் - 641 003*

*முனைவர். மா. ராஜவேல், Ph.D.*
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: 94890 56730*

*தொலைபேசி: 0422 - 6611302*
*நிகரி: 0422 - 2431821*
*மின்னஞ்சல்:pro@tnau.ac.in*

---

*பெறுநர்,*
*ஆசிரியர்,*
*ஐயா,*

*தேதி: 22.11.2025*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் தாக்கம் பற்றிய ஒரு நாள் விவசாயிகள் பயிற்சி**

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்குனரகம், உழவியல் துறை, மத்தியப் பண்ணையில் 21.11.2025 அன்று ‘‘வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் தாக்கம்’’ பற்றிய ஒரு நாள் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. முனைவர் R. கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர் M.K. கலாராணி, இயக்குநர், பயிர் மேலாண்மை இயக்குனரகம் அவர்கள் சிறப்புரையாற்றினார். முனைவர் R.தமிழ்வேந்தன், பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) அவர்கள் துவக்கவுரையாற்றி நிகழ்வை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியின் நிறைவாக முனைவர் K.திருக்குமரன், பேராசிரியர், உழவியல் துறை அவர்கள் நன்றியுரையாற்றினார். இப்பயிற்சியில் 104 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சியில் தொழில் நுட்ப உரையாக வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் பயன்பாடு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அங்கக வேளாண்மை முறைகள் மற்றும் அதன் நிகழ்கால தேவைகளை பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக துரித முறையில் மண்புழு உரம் தயாரிக்கும் முறையை பற்றி விளக்கி மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***